# பண்டையத் தமிழரின் கடவுள் வழிபாட்டு முறை

*திருமதி அ. ரேவதி*
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை
அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, சேலம்
https://doi.org/10.5281/zenodo.14383196

**முன்னுரை**

*பண்டையக் காலத்திலிருந்து தமிழ் மக்கள் தங்களுடைய பழக்க வழக்கங்களை ஒட்டியே, தாங்கள் நம்பிய கடவுளர்களையும் வழிபட்டு வந்தனர். தமிழகத்தில் மட்டும் அன்றி மற்ற நாடுகளிலும் இப்படித்தான். இன்றும் நாம் சுவைக்கும் நல்ல உணவுகளை நமது குழந்தைகளுக்கு கொடுக்கிறோம், நமது பெற்றோர்காளுக்கும் கொடுக்கின்றோம் நமது நண்பர்கள், சுற்றத்தார்க்கும் கொடுக்கின்றோம் இது இயற்கை, இந்த இயற்கையின் அடிப்படையில் தான் கடவுளர் வழிபாடு நடைபெற்று வந்தது.*

*பெரியபுராணத்தில் உள்ள கண்ணப்ப நாயனார் வரலாறு ஒன்றே இதற்கு போதுமான சான்றாகும். திண்ணன என்ற கண்ணப்பர் வேடர் மரபில் வந்தவர் இவர் தனக்கு வேட்டையில் கிடைத்த சிறந்த ஊன்களை உண்டு மகிழ்வதே இவர்களின் வாழ்க்கை. அக்கண்ணப்பர் காளத்தியில் உள்ள சிவலிங்கத்தைக் கண்டவுடன் சிவன் மீது அண்பு கொண்டு தாம் சுவைத்துப் பார்த்த ஊனையே சிவலிங்கத்துக்குப் படைத்தார். சிவபெருமானும் அடியேனுடைய அன்பை ஏற்றார். என்பதை பெரியபுராணம் கூறுகிறது. இது மக்கள் தங்கள் படிக்க வழக்கங்களை ஒட்டியே தெய்வங்களைப் போற்றுவார்கள் என்பதையே காட்டுகின்றது.*

**பண்டைத் தமிழர்களின் உணவு முறைகள்**

*பண்டைத் தமிழர்களின் சிறந்த உணவாக புலாலையும் மதுவையும் கொண்டு இருந்தனர். சங்க நூல்களிலே புலால் உணவும், கட்குடியும் கண்டிக்கப்படவில்லை சிறந்த வள்ளல்கள், குறிப்பாகக் கபிலர், ஔவையார் போன்ற புலவர்கள் எல்லாரும் இவற்றை விலக்கவில்லை, இவர்கள் அனைவரும் புலால் உணவையும், மதுவையும் உண்டு மகிழ்ந்ததை பாராட்டியதையும் புறநானூற்றிலே காணலாம். குறிப்பாக. பத்துப் பாட்டிலே புலால் உணவும் மதுவும் பாராட்டப்பட்டிருப்பதை அறியலாம்.*

*புலால் உண்ணாதவர்களும் அக்காலத்திலே இருந்தனர் என்பதைப் பத்துப்பாட்டிலே காணலாம் ஆனால் அவர்கள் சிறுபான்மையினர், பெரும்பாலான தமிழர்கள் பழந்தமிழர்கள் மதுவும் மாமிசமும் உண்டு மகிழ்ந்து வாழ்ந்து வந்தார்கள் என்பதில் ஐயம் இல்லை இத்தகைய தமிழ் மக்கள் தங்களுடைய கடவுளர்களை எம் முறையில் வணங்கியிருக்க முடியும். தங்களுடைய பழக்க வழக்கங்களைப் பின்பற்றித்தான் வழிப்பட்டு இருப்பார்கள் என்பதில் ஐயம் இல்லை, ஆடு, கோழி, பலியிட்டு அதனுடன் மதுவை படைத்து வழிபாடு செய்தார்கள் என்பதை சங்க இலக்கியங்களில் நாம் காண்கிறோம்.*

**பலியிட்டு வணங்குதல்**

*மகள் காதல் நோயால் வருந்தி இருப்பதை கண்ட தாய் உண்மையை உணரவில்லை- மகளுக்கு ஏதோ தெய்வக் குற்றத்தினால் ‘ தான் தன் அருமை மகளுக்கு நோய் வந்தது என்று நினைத்தாள். ஆதலால் தான் தெய்வங்களுக்குப் பூசை போட்டு மக்களுடைய - பிணியைத் தணிக்கும்படி வேண்டிக் கொள்வதன்று முடிவு செய்தாள். தாயின் செயலை அறிந்த தோழி இச்செய்தியைத் தன் தலைவியிடம். அறிவிக்கின்றாள் என்ற செய்தி குறுந்தொகை*

263 ஆவது செய்யுளில் அமைந்திருகின்றது. தோழியே நீரோடும் ஆற்றின் நடுத்திட்டிலே அன்னை வெறியாட்டு, எடுக்கக நினைக்கின்றாள். உன்னுடைய காதல் நோயை எந்த வகையிலும் தணிக்க முடியாத வேறு பல தெய்வங்களைப் போற்ற நினைத்து ஆட்டுக்குட்டியை அறுத்து, தினையால் செய்த படையலும், பலியையும் படைத்து. வாத்தியங்கள் முழங்கும்படி பூசை செய்யும் போது அத்தெய்வங்கள் பூசாரிகளின் மேல் தோன்றுமே தவிர உன் காதல் நோய்க்கு மருந்தாகாது, இத்தகைய தெய்வங்களை வாழ்த்தி "என் மகளாகிய இவள் பேயால் பிடிக்கப்பட்டாள்" என்று உன் அன்னை தெய்வத்தின் மீது பழி சுமத்துதல் வருந்தத்தக்கது.

***"மறிக்குரல் அறுத்துத் தினைப்பிரப்பு இரீஇச்***
***செல் ஆற்றுக் கவலைப் பல்இயம் கறங்கத்***
***தோற்றம் அல்லது, நோய்க்கு மருந்து ஆகா***
***வேற்றுப் பெருந்தெய்வம் பலவுடன் வாழ்த்திப்***
***பேஎயக் கொளீஇயள், இவள் எனப்படுதல்***
***நோதக் கன்றே தோழி"***

இந்த குறுந்தொகைப் பாடலில் பழந்தமிழ் மக்கள்பல தெய்வங்களுக்கு உயிர்ப்பலியிட்டு வழிபாடு செய்தார்கள் என்ற உண்மையை இப்பாடல் புலப்படுத்துன்றது. புறநானுற்றிலேயும் கடவுளுக்கு புலால் உணவு வைத்துப் பூசை செய்வது தான் விருப்பமானது என்ற கருத்து காணப்படுகிறது.

***"வாடாப் பூவின் இமையா நாட்டத்து***
***நாற்ற உணவி னோரும்"*** *புறம் 62*

வாடாத கற்பகத்தின் தாரினையும், இமையாத கண்ணினையும் நாற்றமாகிய உணவையும் உடைய தேவர்களும். நாற்றம் என்பது சங்க காலத்தில், நறுமணத்தை குறித்தது. சமைத்த புலால் உணவின் வாடை நறுமணம் என்றே இன்றும். நுகர்வோர் உண்டு இப்புறநானூற்றுப் பாடல் வழி தமிழர்கள் தங்களுடைய தெய்வங்களுக்கு புலால் கலந்த உணவைப் படைத்து வணங்கி வழிப்பட்டனர் என்பதைக் காட்டுகின்றது.

பத்துப்பாட்டில் அமைந்துள்ள மதுரைக் காஞ்சியில் சிவபெருமான் உள்ளிட்ட அனைத்து தெய்வங்களும் புலால் உணவையே விரும்பும் தெய்வங்களாக இருந்தன என்ற குறிப்பு காணப்படுகிறது

***நீரும், நிலனும், தீயும், வளியும்***
***மாகம் விசும்போடு ஐந்துடன் இயற்றிய,***
***மழுவாள் நெடியோன் தலைவனாக,***
***மாசு அற விளங்கிய யாக்கையர், சூழ்சுடர்***
***வாடாப் பூவின் இமையா நாட்டத்து***
***நாற்ற உணவின் உருகெழு பெரியோர்***

இப்பாடல் பகுதியில் பண்டைத் தமிழரின் தெய்வங்கள் புலாலையே விரும்பினமக்களும் அவ்வுணவையே தெய்வங்களுக்கு படைத்தனர் என்ற உண்மைமை உணர்த்திற்று.

தேவர்களுக்காக வேள்விகள் நடத்தப்பட்டன, அந்த வேள்வியிலே பலியிடப்படும் பிராணியின் ஊன் தேவர்கள் விரும்பும் உணவு. இதையே அவிப்பலி என்பர். இத்தகைய வேள்வி பாரத நாட்டினர்அனைவராலும் பண்டைக்காலத்தில் போற்றப்பட்டு வந்தது. பண்டைய மக்கள் அன்றையக்காலத்தில் புலால் உண்ணுகின்றவரகளாக இருந்தனர். அதலால் உயிர்ப் பலியிடும் வேள்விகளைச் செய்தனர். அவைகளின் வாயிலாகக் கடவுளரை வழிபட்டனர் என்பதைக் புலப்படுத்துகின்றது. இதற்கு பண்டையத் தமிழர்கள் விலக்கல்லர். பண்டைக் காலத்தில் தங்கள் பழக்க வழக்கங்களை ஒட்டியே கடவுளரை வணங்கினர்கள். பொதுவகைப் பண்டைய மக்கள் அனைவரும் இம்முறையில் தான் வணங்கினர்கள் என்பதை மேலே கூறியவற்றைக் கொண்டு அறியலாம். இனி குறிப்பிட்ட சில தெய்வங்கள் தமிழர்களால் எப்படி வணங்கப்பட்டன என்பதை காண்போம்.

**முருகன் வழிபாடு**

சங்க இலக்கியங்களில் முருகனின் வழிபாட்டு முறையை விரிவாகக் கூறப்படுகின்றது. உயிர்ப் பலியில்லாமல் முருகனின் வழிபாடு நடந்ததில்லை என்று கூறலாம். தலைவி காதலால் வருந்துகின்றாள் இதை இவள் அன்னை அறியவில்லை. முருகனால் தான், தன் மகளுக்கு பிணி நேர்ந்தது என்று எண்ணி முருகனுக்கு விழா எடுத்தாள். அப்போது பூசாரி மீது முருகன் அருள் வந்து ஆடுகின்றான். இதனை கண்ட தோழி கேட்பதாக ஒரு செய்யுள் குறுந்தொகையில் காணப்படுகிறது.

பண்டையத்தமிழ் மக்கள் முருகனை எவ்வாறு வழிபட்டனர் என்பதை அறிய முடிகிறது.

முருகனை வழிபட்டு வந்த அறிவுள்ள வேலனே! கோபித்துக் கொள்ள வேண்டாம் உன்னைஒன்று கேட்கின்றேன். பல்வேறுபட்ட சோற்றையுடைய பலியை வைத்துப் படைத்து, சிறிய ஆட்டுக்குட்டியைக் கொன்று, இத்தலைவியின் நெற்றியில் தடவி, முருகக் கடவுளை வணங்கிப் பலியாகக் கொடுக்கின்றாள். இப்படிக் கொடுக்கும் பலியை இவளை வருந்தச செய்த மலை நாட்டுத் தலைவனுடைய மார்பு உண்ணுமோ

***முருகு அயர்ந்து வந்த முதுவாய் வேல்***
***சினவல் ஓம்புமதி வினவுவது உடையேன்***
***பல்வேறு உருவில் சில் அவிழ் மடையொடு***
***சிறுமறி கொன்று, இவள் நறுநுதல் நீவி***
***வணங்கினை கொடுத்தி ஆயின், அணங்கிய***
***விண்தோய் மாமலைச் சிலம்பன்***
***ஒண்தார் அகலமும் உண்ணுமோ பலியே***

இப்பாடல்முருகனுக்கு ஆடுபலியிடும்வழக்கம் உண்டென்பதைக் குறிப்பிடபடுகிறது.

***வெறிஎன உணர்ந்த உள்ளமொடு மறிஅறுத்து***
***அன்னை அயரும் முருகு”***

என்ற பாடல் வெறியெடுத்தால் உன் நோய் தீரும் என்று எண்ணி ஆட்டை அறுத்து உன் அன்னையால் முருகனை வணங்கப்படும் என்ற செய்தி நற்றணைப் பாடல் 47 மூலம் அறியப்படுகிறது

***களம் நன்கு இழைத்துக் கண்ணிசூட்டி***
***வளநகர் சிலம்பப் பாடிப் பலி கொடுத்து***
***உருவச் செந்தினை குருதியொடு தூஉய்***
***முருகாற்றுப் படுத்த உருகெழு நடுநாள்***

முருகனுக்குப் பூசை செய்கின்ற இடத்தை நன்றாகத தூய்மை செய்தான். முருகனுடைய வேலுக்கு மலர்மாலை சூட்டி சிறந்த நகரில் ஆரவாரம் உண்டாகும்படி முருகனைப் புகழ்ந்து பாடி - ஆட்டைப் பலி கொடுத்தான். நல்ல தினையுடன் இரத்தத்தையும் கலந்து தூவி முருகனை வழிபட்டான் என்பது அகநானூற்றுப் பாடல் வழி அறியலாகும்.

***“சிறுதினை மலரொடு விரைஇ மறி அறுத்து***
***வாரணக் கொடியோடு வயின்பட நிறீஇ***
***ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்”***

தினையரிசியைப் பூக்களோடு கலந்து பலி அரிசியாக வைப்பர். ஆட்டை அறுப்பார் கோழிக் கொடியொடுஅவ்விடத்தில்முருகனை நிலை நாட்டுவர் இவ்வாறு முருகன் வாழிபாடு ஊர் தோறும் நடைபெற செய்வர்.

***மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்***
***குருதியொடு விரைஇய தூவெள்ளரிசி***
***சில்பலிச் செய்து பல்பிரப்பு இரீஇ***

வலிமை பொருந்திய பெரிய கொழுத்த ஆட்டுக் கடாவின் இரத்தத்துடன் தூய வெண்மையான அரிசியைக் கலந்து சிலர் பலியாகச் செய்து பல கூடைகளில் வைத்து முருகனை வணங்கினார்கள் என்ற செய்தியை அறியமுடிகிறது.

**காளி வழிபாடு**

துர்க்கை, ஐயை காளி, என்னும் பெண் தெய்வத்திற்கும் பலி கொடுத்து வழிபாடு செய்தனர் பண்டையத்தமிழர்கள்.

***“விடர்முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்***
***கடனும் பூணாம் கைந்நூல் யாவாம்”***

பிளப்பும் குகையும் உள்ள மலைப் பக்கத்தில் உள்ள வெற்றி பொருந்திய துர்க்கைக்குப் பலியிட்டுப் பூசை செய்யும் கடமையைச் செய்யாது விட்டோம் கையில் காப்பு நூலைக் கட்டாமலும் விட்டோம்

இந்தப்குறுந்தொகைப்பாடலில்தமிழர்கள் துர்க்கைக்குப் பூசை செய்த விதத்தைக் காட்டுகிறது. துர்க்கைக்கு உயிர்ப்பலியிட்டுப் வழிபடும் வழக்கம் இருந்ததை விளக்குகிறது. விழாவின் தொடக்க நிகழ்வாக கையில் மஞ்சள் நூலைக்கட்டிக் கொள்தற்குக் காப்புக் கட்டிக்கொள்வது என்பார்கள். இக்காப்பு நூல் விழாவின் முடிவிலே தான் காப்புக் களைவார்கள். இவ்வழக்கம் இன்றும் தமிழ் நாட்டிலே கிராம, நகர தேவதைகளுக்கு நடத்தும் திருவிழாக்களில் உண்டு.

காளிஐயை, துர்க்கைத்திருவிழாஎவ்வாறு நடை பெற்றது என்பதைச் சிலப்பதிகாரத்திலே காணலாம். சிலம்பதிகாரம் மதுரைகாண்டம், வேட்டுவ வரியிலே இவ்விழாவைப் பற்றி விரிவாகக் காணப்படுகின்றது

**நாகரிகமான வழிபாடு**

*பண்டைக்காலத்தில் இருந்து இன்று வரை தெய்வங்களுக்கு உயிர்ப்பலியிட்டு வணங்கும் வழக்கம் மிகுதியாக இருக்கின்றது. ஆயினும் அறிஞர்கள் அதை நாகரிகமுள்ள வழிபாடாகக் கொள்ளவில்லை. ஆயிரகணக்கான ஆண்டுகளுக்கு முன்பே உயிர்ப்பலியிடும் வழக்கத்தைக் கண்டிக்கத் தொடங்கி விட்டனர். தெய்வங்களுக்கு உயிர் பலியிடுவது தவறு என்ற கொள்கை, சைன - பௌத்த மதங்களின் செல்வாக்கு பாரத நாட்டில் பரவிய பிறகுதான் ஏற்பட்டிருக்க வேண்டும். தமிழகத்திலும் அம்மதங்கள் பரவிய வளர தொடங்கிய பின்னர் தான் உயிர்ப் பலியிடும் வழக்கம் குறைந்தது. சிமபெருமான், திருமால், முருகன் போன்ற தெங்வங்களை, மலர் கொண்டு பூசிக்கும் வழக்கம் ஏற்பட்டது காய்கனிகள், தானியங்களால் செய்த பண்டங்களை படைத்துப் பூசை செய்யும் பழக்கம் ஏற்பட்டது. நாயன்மார்கள், ஆழ்வார்கள் காலத்தில் தமிழகத்தில் இவ்வழக்கம் மிகுதியாகப் பரவியது. ஆயினும் புலால் உணவை வெறுத்தவர்களே, தங்கள் வழிபாட்டு தெய்வங்களை, சைவ தெய்வங்களாக வைத்து வழிபாடு செய்து வந்தனர்.*

*மாமிசம் உண்ணும் மக்கள் தாங்கள் வணங்கும் தெய்வங்களைத் தங்களுடைய வழக்கப்படி உயிர்ப்பலி கொடுத்து வணங்கி வந்தனர். சில ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட உயிர்ப்பலி தடைச் சட்டங்கள் தான் தெய்வங்களுக்கு உயிர்ப்பலியிடுவதை ஓரளவு தடுத்து வந்தது என்று கூறலாம்.*

**முடிவுரை**

*பண்டைத் தமிழர்களின் தெய்வங்களுக்கு உயிர் பலியிட்டு பூசை போட்டு, வணங்கும் முறை இருந்தது. தமிழர்களின் நாகரிகம் வளர வளர கடவுள் வழிபாட்டு முறையில் மாற்றம் பெற்றுள்ளன என்பதை அறியப்படுகிறது.*